**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.**

**CC.No. 32/2025**

**வழக்கு சாட்சி PW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **சங்கிலி** | தொழில் | : கிராம நிர்வாக அலுவலர் |
| தகப்பனார் பெயர் | : **சங்கிலி** | கணவர் பெயர் | : ----- |
| கிராமம் | : பூலத்துார் | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 35/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 22.06.2026 |

**( எதிரி A1 ஆஜரில் உள்ளார், எதிரி A2 மனுவின்பேரில் ஆஜரில் இல்லை)**

**<u>சாட்சி மனுவின்பேரில் அழைக்கப்பட்டு, எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

இந்த வழக்கு தொடர்புடைய புகாரை நான்தான் எழுதினேன். புகாரில் எந்த தேதி, எத்தனை மணிக்கு பாறைகள் உடைக்கப்பட்ட விபரம் எதுவும் எனது புகார் மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான் . பொதுவாக பாறைகள் உடைக்க வேண்டும் என்றால் கம்பிரசர் கொண்டு பாறைகளில் துளையிட்டு வெடி மருந்தினை நிரப்பி பாறைகளை உடைக்கச்செய்வார்கள் என்றால் சரிதான் . கம்பிரசர் கொண்டு பாறைகளை துளையிட்டால் அதிக சத்தம் எழும் என்றால் சரிதான். பொதுவாக ஒரு பட்டா எண்ணில் பல்வேறு சர்வே எண்கள் குறிப்பிடப்படும் என்றாலும் , அந்த சர்வே எண்கள் வெவ்வேறு இடங்களில் அமைந்திருக்க வாய்ப்புள்ளது என்றாலும் சரிதான். இந்த வழக்கு தொடர்புடைய புகாரில் சர்வே எண் விபரம்

எதுவும் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான் . புகாரில் உரிமையாளர் விபரம் மற்றும் சர்வே எண் தொடர்புடைய விஸ்திரணம் எதுவும் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான் . பொதுவாக JCB இயந்திரத்தை வைத்து மணல் , கற்கள் ஆகியவற்றை நகற்றி இடத்தை சமன்செய்ய பயன்படுத்துவார்கள் என்றாலும், JCB ஐக் கொண்டு பாறைகளை உடைக்க முடியாது என்றால் சரிதான், JCB ஐக் கொண்டு மட்டும் உடைக்கமுடியாது . புகார் கொடுப்பதற்கு 1 நாளுக்கு முன்பு நான் சம்பவ இடத்தை சென்று பார்த்தேன்.

சம்பவ இடத்தை பார்வையிட்டபோது இடத்தை புகைப்படம் எடுத்தேனா என்றால் எடுத்தேன், அந்த புகைப்படத்தை புகாருடன் காவல்நிலையத்தில் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன் . அவ்வாறு நான் சம்பவ இடம் தொடர்புடைய புகைப்படம் எடுக்கவில்லை என்றாலும் , அத்தகைய புகைப்படம் எதுவும் புகாரின் போது காவல்நிலையத்தில் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எழுத்து மூலமாக எனது அலுவலகத்திற்கு இந்த வழக்கு சம்பந்தமாக புகார் எதுவும் வரப்பெற்றதா என்றால் இல்லை. பாறை உடைக்கப்பட்டது சம்பந்தமாக நிலத்தின் உரிமையாளர் மீது நான் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை . வெடி வைக்க பயன்படுத்தப்படும் கம்பிரசர் இயந்திரத்தை இயக்கும் நபர் மற்றும் அதன் ஓட்டுநர் மீது நான் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. எங்கள் வருவாய்த்துறை மேல் அதிகாரிகளுக்கு கம்பிரசர் இயந்திர ஓட்டுநர் , உரிமையாளர் மீது அறிக்கை சமர்பித்து எங்கள் வருவாய்த்துறை தண்டம் எதுவும் விதிக்கப்பட்டதா என்றால் இல்லை . காமனூர் கிராமத்திற்கும் , சம்பவ இடத்திற்கும் இடையே சுமார் அரை கிலோமீட்டர் தொலைவு இருக்கும் . JCB வாகனத்தின் மீது புகார் கொடுத்துள் நிலையில் JCB வாகனத்தின் பதிவு எண் என்னவென்றால் அந்த வாகனத்தின் பதிவு எண் தற்போது நினைவில்லை . புகார் கொடுத்த அன்று போலீசார் என்னை விசாரணை செய்தார்கள் . போலீசார் என்னை காவல்நிலையத்தில் வைத்து விசாரணை

செய்தார்கள். கம்பிரசர் உதவி கொண்டு பாறைகளில் வெடி வைத்து உடைத்த நபர்கள் வேறு நபர்கள் என்றாலும், அவர்களை இந்த வழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டி JCB வாகன உரிமையாளர் மீது தொடர்பு இன்றி புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, நான் சம்பவ இடத்தை பார்வையிட்ட போது கம்பிரசர் வாகனம் அங்கு இல்லை, JCB வாகனம் தான் இருந்தது, அதன் அடிப்படையில் தான் புகார் கொடுத்தேன் . இடத்தின் உரிமையாளர் மீது தான் நான் புகார் கொடுத்திருக்கவேண்டும் என்றாலும், இடத்தின் உரிமையாளர் வேண்டப்பட்டவர் என்றாலும், சிலர் தூண்டுதலின்பேரில் எதிரி மீது புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல , மேலதிகாரிகளின் உத்தரவின்பேரில் தான் வாகனத்தின் மீது புகார் கொடுக்கப்பட்டது. வாகனம் அனுமதியின்றி செயல்பட்ட காரணத்தால்தான் வாகனத்தின் உரிமையாளர் மீது புகார் கொடுக்கப்பட்டது. சம்பவம் தொடர்பாக மேலதிகாரிக்கு எழுத்துரு மூலமாக அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான் . அந்த அறிக்கையை போலீசாரிடம் நகலாக சமர்பித்தேனா என்றால் இல்லை.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.06.22 19:21:31 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.

**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**

**கொடைக்கானல்.**

**CC.No. 32/2025**

**வழக்கு சாட்சி PW.2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **ராஜேந்திரன்** | தொழில் | : கார்பெண்டர் |
| தகப்பனார் பெயர் | : அழகர்சாமி | கணவர் பெயர் | : ----- |
| கிராமம் | : காமனூர் | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 62/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 22.06.2026 |

**( எதிரி A1 ஆஜரில் உள்ளார், எதிரி A2 மனுவின்பேரில் ஆஜரில் இல்லை)**

**<u>சாட்சி மனுவின்பேரில் அழைக்கப்பட்டு, எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

பொதுவாக பாறைகளில் வெடி வெடிக்கவேண்டும் என்றால் கம்பிரசர் கொண்டு துளையிட்டு வெடி மருந்து நிரப்பி வெடிக்கச்செய்வார்கள் என்றால் சரிதான் . அவ்வாறு இல்லையெனில் ஆட்களைக்கொண்டு பாறையில் துளையிட்டு வெடி மருந்தை நிரப்பி வெடிக்கச்செய்வார்கள்என்றால் சரிதான் . JCB வாகனத்தைக் கொண்டு பாறைக்கற்கள், மண் ஆகியவற்றை சீர்செய்ய முடியும் என்றாலும் , ஆனால் JCB ஐக் கொண்டு பாறையை உடைக்க முடியாது என்றால் சரிதான், நான் உடைத்து பார்த்ததில்லை.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN
Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.06.22 19:41:10 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.

**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**

**கொடைக்கானல்.**

**CC.No. 32/2025**

**வழக்கு சாட்சி PW.3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **முருகேசன்** | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : மருதையாண்டி | கணவர் பெயர் | : ----- |
| கிராமம் | : காமனூர் | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 77/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 22.06.2026 |

**( எதிரி A1 ஆஜரில் உள்ளார், எதிரி A2 மனுவின்பேரில் ஆஜரில் இல்லை)**

**<u>சாட்சி மனுவின்பேரில் அழைக்கப்பட்டு, எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

பொதுவாக பாறைகளில் வெடி வெடிக்கவேண்டும் என்றால் கம்பிரசர் கொண்டு துளையிட்டு வெடி மருந்து நிரப்பி வெடிக்கச்செய்வார்கள் என்றால் சரிதான் . அவ்வாறு இல்லையெனில் ஆட்களைக்கொண்டு பாறையில் துளையிட்டு வெடி மருந்தை நிரப்பி வெடிக்கச்செய்வார்கள்என்றால் சரிதான் . JCB வாகனத்தைக் கொண்டு பாறைக்கற்கள், மண் ஆகியவற்றை சீர்செய்ய முடியும் என்றாலும் , ஆனால் JCB ஐக் கொண்டு பாறையை உடைக்க முடியாது என்றால் சரிதான்.

Taken down by me in open court and read over to the witness and acknowledged by him/her to be correct.

R ARUN PANDIAN
Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.06.22 19:41:16 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,

Kodaikanal.